# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 51

# கர்த்தரின் கடைசி இராபோஜனம்



## Lord's Last Supper

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# கர்த்தரின் கடைசி இராபோஜனம்

# Our Lords Last Supper



கிறிஸ்து இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் நமது கர்த்தர் தம்முடைய நினைவாக சீஷர்கள் அனுசரிக்கும்படி கொடுத்த கட்டளையைக் குறித்து இன்றைய பாடத்தில் தியானிப்போம்.

இது அவருடைய கடைசி இராப்போஜனமாகும். இதைக்குறித்து பின்வரும் வசனப்பகுதியில் நாம் வாசிக்கலாம் -

**1கொரிந்தியர் 11:23-26**

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன். என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து - இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்

வேத மாணவர் மத்தியில் இந்த அனுசரிப்பு -**'கர்த்தருடைய நினைவுகூறுதலின் நாள்"** என்று அழைக்கப்படுகிறது.

இது நம் கர்த்தர் **'மேல்வீட்டு அறையில்"** அனுசரித்த "கடைசி இராப்போஜனத்தை" நினைவுகூறுவதாகும். தம் சரீரமாகிய சபை - இதை புனிதமாகக் கருதி அனுசரிக்கவேண்டும் என்று கட்டளையிட்டார்.

- **இவை அனைத்தும் எதை அடையாளப்படுத்துகின்றன?**
- **இதை எப்பொழுது, எப்படி ஆசரிக்கவேண்டும்?**
- இந்த நினைவுகூறுதலை அனுசரிக்க யார் யார் அனுமதிக்கப்பட்டுள்ளனர்?

இக்கேள்விகள் அனைத்திற்குமான விடைகளை இன்றைய பாடத்தில் நாம் காண இருக்கிறோம்.

பின்வரும் வசனத்தை வாசித்து இதை துவங்குவோம் -

1கொரிந்தியர் 5:7

"ஆகையால் நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே"

கிறிஸ்து எவ்விதத்தில் நம்முடைய "பஸ்காவாக" இருக்கிறார்? இங்கு கர்த்தர் அனுசரித்த "இராப்போஜனம்" யூதர்களுடைய பஸ்கா என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

மேலும் அந்த பஸ்காவின் அனுசரிப்பில் அவர்கள் பலியிடப்பட்ட "ஆட்டுக்குட்டியைப்" புசிக்கவேண்டும். எனவே கிறிஸ்து எவ்விதத்தில் "நம்முடைய பஸ்காவாக" இருக்கிறார் என்ற கேள்வி எழுகிறது.

இதை புரிந்துகொள்வதற்கு பழைய ஏற்பாட்டில் உள்ள "பஸ்காவை" நாம் புரிந்துகொள்வது அவசியம். இதை பின்வரும் வசனப்பகுதியை வாசிப்பதன்மூலம் அறியலாம் -

யாத்திராகமம் 12:1-11

"கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி - இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம். இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக. நீங்கள் இஸ்ரயேல் சபையார் யாவரையும் நோக்கி - இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள் , வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவீர்கள். ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல் வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத் தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவனவன் புசிப்புக்குத்தக்கதாக இலக்கம்பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும், ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்கவேண்டும். செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்துகொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதிவரைக்கும் வைத்திருந்து, இஸ்ரயேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து, அன்று ராத்திரியிலே அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதைப் புசிக்கக்கடவீர்கள். பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல, அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக. அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல், விடியற்காலம் மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியால் சுட்டெரிப்பீர்களாக. அதைப் புசிக்கவேண்டிய விதமாவது : நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை

தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய் புசிக்கக்கடவீர்கள், அது கர்த்தருடைய பஸ்கா”



இந்த பஸ்கா என்பது தேவன் இஸ்ரயேல் ஜனங்கள் அனுசரிக்கும்படி மோசே மூலம் அவர்களுக்கு கொடுத்த முதல் நியாயப்பிரமாணம் ஆகும்.

இப்பொழுது இந்த பஸ்கா பற்றின முழு விபரத்தையும் நாம் காண்போம்

**யாத்திராகமம் 12:43**

“மேலும், கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி பஸ்காவின் நியமமாவது : அந்நிய புத்திரன் ஒருவன் அதை புசிக்கவேண்டாம்”

இந்த பஸ்கா இஸ்ரயேலர்களுடைய வருட காலண்டரில் முதல் மாதமாகிய **‘ஆபீப்”** மாதத்தில் அனுசரிக்கப்பட்டது.

**யாத்திராகமம் 13:4**

“ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற்போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அவனுடைய அயல்வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும்”



இந்த மாதத்தை இஸ்ரயேலர் “நீசான்” மாதம் என்றும் அழைக்கின்றனர்.

- ஒரு ஆடு நீசான் மாதம் 10ம் தேதி அன்று தெரிந்துகொள்ளப்பட்டு, 14ம் தேதிவரைக்கும் பராமரிக்கப்பட்டது.
- பின்பு அந்த ஆடு சாயங்காலத்தில் அல்லது சூரியன் அஸ்தமித்தபின்பு கொல்லப்படவேண்டும்
- அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, கதவுகளின் நிலைக்கால்களில் தெளிக்கப்படவேண்டும்
- அதன் மாம்சம் அக்கினியில் சுடப்பட்டு அன்றிரவே புசிக்கப்படவேண்டும்
- அதை பச்சையாகவோ அல்லது வேகவைத்தோ புசிக்கக்கூடாது




- அக்கினியில் சுடப்பட்ட மாம்சத்தை அவர்கள் கசப்பான கீரையோடும், புளிப்பில்லா அப்பத்தோடும் புசிக்கவேண்டும்
- மாம்சத்தில் விடியற்காலை வரை எதையும் மீதம் வைக்கக்கூடாது. ஒருவேளை மீதம் இருந்தால், அதை விடிவதற்கு முன்பு அவர்கள் அக்கினியில் சுட்டெரிக்கவேண்டும்.

**- இதில் பங்குபெற்று, புசிக்கிற அனைவரும் கச்சை கட்டி, தங்களுடைய கால்களில் பாதரட்சை அணிந்து, கைகளில் தடிகளைப் பிடித்துக்கொண்டு "பயணத்திற்கு" ஆயத்தமான நிலையில் புசிக்கவேண்டும்.**

இறுதியாக, இதை அவர்கள் தீவிரமாக புசிக்கவேண்டும். ஏனெனில் "**இது கர்த்தருடைய பஸ்கா**"

இவையனைத்தும் எதைக் குறிக்கிறது என்று காண்போம் -

தேவன் இஸ்ரயேலர்களுக்கு கொடுத்த இப்பிரமாணத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கலாம் -

எபிரேயர் 10:1

"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால் வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது"

- ஆம். நியாயப்பிரமாணம் என்பது ஒரு நிழலாக இருக்கிறது.

மேலும் இதைக் குறித்து வாசிப்போம் -

கொலோசெயர் 2:16,17

"ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது"

ஆம். நியாயப்பிரமாணம் கிறிஸ்துவைப் பற்றின அநேக காரியங்களை நிழலாக கொண்டுள்ளது. இந்த 'நிழல்கள்" கிறிஸ்துவின் மூலம் , கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்படுகிறது.

இப்படியிருக்க, கிறிஸ்துவைக் குறித்து பஸ்கா நிழலாக காண்பிப்பது என்ன?

**ஆடு** - இது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறது. இவர் தம்முடைய சரீரமாகிய சபைக்கு தலையாக இருக்கிறார். இதை பின்வரும் வசனம் தெளிவாக்குகிறது -

1கொரிந்தியர் 5:7

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே"



**பஸ்கா ஆடு** - "தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவைக் குறிக்கிறதை யோவான்:1:29ல் அறியலாம்

""**10 ம் தேதி முதல் 14ம் தேதி வரை ஆடு பராமரிக்கப்படுவது**"- இது "தம்முடைய வீட்டாராகிய" இஸ்ரயேலர் மத்தியில் நம் கர்த்தருடைய

ஊழியக்காலத்தைக் குறிக்கிறது.

அவர் மூன்றரை வருடக் காலம் இஸ்ரயேலர் மத்தியில் ஊழியம் செய்தார் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

தானியேல் 9:27

"அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதிசென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார். அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன் மேல் தீருமட்டும் சொரியும் என்றான்"

நம் கர்த்தரின் ஊழியம் எவ்வளவுகாலம் நீடித்தது என்பதை இந்த வசனம் மாத்திரமே தெரிவிப்பதை நாம் அறிவோம்.

**பதினான்காம் தேதி "சாயங்கால வேளையில்" ஆடு கொல்லப்படுவது** - நம் கர்த்தருடைய மரணம் நான்காவது வருடத்தின் "மத்தியில்"(ஒன்பதாம் மணிவேளையில்) சம்பவித்ததைக் குறிக்கிறது.

மத்தேயு 27:46-50

"ஒன்பதாம் மணிநேரத்தில் இயேசு - ஏலீ ஏலீ லாமா சபக்தானி என்றுமிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார்"



யூதர்களுடைய வழக்கத்தின்படி **"ஒன்பதாம் மணிவேளை"** என்பது மதியம் மூன்று மணியைக் குறிக்கிறது. ஏனெனில் அவர்கள் காலை ஆறு மணியிலிருந்து தங்களுடைய மணிநேரத்தைக் கணக்கிடுகின்றனர்.

**"கதவுகளின் நிலைச்சட்டத்தில் இரத்தம் தெளிக்கப்படுவது"** - இது "கதவுகள்" அடையாளப்படுத்துகிற "இருதயங்களில்" கர்த்தருடைய விலைக்கிரயம் தெளிக்கப்படுவதை குறிக்கிறது.

வெளிப்படுத்தல் 3:20

" இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்.."

இவ்விதமாக ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய - "விசுவாசவீட்டார்" - 'இயேசுவின் இரத்தம் தெளிக்கப்படுவதன் மூலம் தங்களுடைய இருதயங்களில் பாவத்திலிருந்து சுத்தீகரிப்பை அடைகிறார்கள்.

எபிரேயர் 10:22

"துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்"

இயேசு சிலுவையில் கொடுத்த ஈடுபலியின் விலைக்கிரயத்தின் மூலம் பெறப்படும் பாவமன்னிப்பு மற்றும் நீதிமானாக்கப்படுதலை அடையாளப்படுத்துகிறது.

"அன்றிரவு" - வேத வசனம் குறிப்பிடுகிற "இரவு" பகுதியை இது குறிக்கிறது.

**சங்கீதம் 30:5**

“சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்”

இது இராஜ்யமாகிய “விடியலுக்கு” முன்பு உள்ள “இரவுப்” பகுதியைக் குறிக்கிறது. இது கர்த்தருடைய மரணத்தைத் தொடர்ந்து வந்த - சுவிசேஷயுக காலப்பகுதியைக் குறிக்கும்.

**"அக்கினியில் சுட்டு"** - இது நம் இரட்சகரின் பாடுகள், உபத்திரவங்கள் மற்றும் மாம்சத்தில் இருக்கும்பொழுது சந்தித்த சோதனையாகிய அனுபவங்களை மொத்தமாகக் குறிக்கும் அடையாளம்.

**"சுடப்பட்ட மாம்சத்தைக்"** குறித்து வாசிக்கையில் - அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக” - இது கர்த்தருடைய அனுபவங்களை அவருடைய சீஷர்கள் மற்றும் பின்னடியார்கள், அவருடைய அடிச்சுவடுகளில் அவரை பின்பற்ற முடிவுசெய்யும்போது, தங்களுள் கிரகித்துக்கொள்வதைக் குறிப்பதாக வாசிக்கிறோம் -

**1பேதுரு 2:21**

“அதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப்போனார்”

ஆம். கர்த்தர் விட்டுச்சென்ற **"மாதிரியே"** அவரது பின்னடியார்கள் புசிக்கவேண்டிய மாம்சமாகும்.

இந்த மாம்சத்தை அவருடைய சீஷர்கள் **"புளிப்பில்லாத அப்பம் மற்றும் கசப்பான கீரைகளோடு"** புசிக்கவேண்டியது அவசியம்.

**"புளிப்பில்லாத அப்பம்"** - பரிசுத்தமான சத்திய வார்த்தைகள்

**"கசப்பான கீரைகள்"** - இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் “வெளிச்சத்தில் நடக்க முயற்சிக்கும்பொழுது சந்திக்கவேண்டிய அனுதின உபத்திரவங்கள் மற்றும் குழப்பங்களைக் குறிக்கிறது.

**2தீமோத்தேயு 3:12**

“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்”

ஆம். இது ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் (வெளிப்படுத்தல் 14:4) பெற்றுக்கொள்கிற முழு ஒத்தாசை மற்றும் உதவிகளைக் குறிக்கிறது.

**அந்த "மாம்சம்" பச்சையாகவோ அல்லது வேகவைத்தோ புசிக்கப்படாமல்** இருப்பது - “மனிதனாகிய இயேசுகிறிஸ்துவின்” பாடுகள் அக்கினியில் சுடப்படுவதன்மூலமே அடையாளப்படுத்துகிறது.

பொதுவாக ஆகாரத்தை சமைக்கும்போது அக்கினி பயன்படுத்தப்படுகிறது. அக்கினியின் உஷ்ணம் சமையல் செய்யும் முறைகளில் வேறுபடுகிறது. ஆனால் வேக வைப்பதைக் காட்டிலும் நேரடியாக சுடப்படுவதற்கு இரண்டு மடங்கு உஷ்ணம் தேவைப்படுகிறது. இது பரிபூரண மனிதனாக கர்த்தர்

சந்தித்த உபத்திரவங்களைக் குறிக்கிறது.

இங்கு கூறப்பட்டுள்ள ஒரு கட்டளையை கவனிப்போம் -

"..**அதிலே ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்காமல்..**" - இது நமது கர்த்தரோடு பாடுபட்டு, அவருடைய பலிகளில் பங்குபெற்று "கிறிஸ்துவோடுகூட" மரிப்பதற்கான இந்த பரம அழைப்பு, 'இரவாகிய" இந்த சுவிசேஷ யுகத்தில் மாத்திரம் இருப்பதைக் குறிக்கிறது. அவரது சரீரத்தில் அங்கமாகக்கூடிய பொன்னான வாய்ப்பு ஆயிரவருட அரசாட்சியின் விடியலாகிய "காலையில்" முடிவுக்கு வருகிறது. அப்பொழுது கிறிஸ்துவின் முழு சரீரமும் நிறைவடைந்து, மகிமை அடைந்திருக்கும்(மல்கியா 4:2).

இந்த தெய்வீக வாய்ப்பு அதற்குப் பின்பு ஒருபோதும் கிடைக்கமாட்டாது.
ஆம். இந்த திவ்ய சுபாவத்திற்கு வழிநடத்தும் பெரிதான பரலோக இரட்சிப்பு இரண்டாம் உலக காலப்பகுதியாகிய சுவிசேஷயுகத்தோடு(இரவு) முடிவடைகிறது.

மூன்றாம் உலகில் ஆயிரவருட அரசாட்சியின் "காலையில்" மற்றொரு இரட்சிப்புக்கான வாய்ப்பு உலக மனுக்குலத்திற்கு திறக்கப்படும். அது பூமிக்குரிய இரட்சிப்பாகும்.

**அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும் , உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்.**". - முழுவதும் ஆயத்தமான நிலையில் பாதரட்சை மற்றும் தடிகளைப் பிடித்திருப்பது என்பது பயணிகள் அல்லது யாத்திரை செய்பவர்களைக் குறிக்கும். ஏனெனில் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள்அனைவரும் 'பூமியின் மீதான வனாந்தரத்தில்" பயணம் செய்பவர்களாக இருக்கின்றனர்.
அவர்களுடைய நிரந்தரமான வீடு "**பரலோக கானான்** ".

இதனாலேயே கர்த்தர் கூறும்போது -

யோவான் 14:3

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு.."

கர்த்தரும் அவருடைய சீஷர்களும் இந்த 'வீட்டை" நோக்கியே பயணம் செல்கின்றனர். இங்கு "**கட்சை மற்றும் பாத ரட்சை**" பின்வருவனவற்றைக் குறிக்கிறது -

எபேசியர் 6:13

"ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்"

இந்த வஸ்திரமாகிய தேவனுடைய சர்வாயுத வர்க்கம் பற்றி வசனம் 14 முதல் 17 வரை விவரிக்கப்பட்டுள்ளது. கர்த்தரைப் பின்பற்றுகிற சீஷர்கள் ஒவ்வொருவரும் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை" போராட இந்த வஸ்திரத்தையும் பாதரட்சையையும் அணிவது அவசியம்.

இங்கு **கைகளில் தடி பிடித்துச் செல்வது** என்பது - பஸ்காவை அனுசரிப்பதில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகள், தற்போதைய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் அனுபவங்களைக் குறிக்கிறதாக உள்ளது. இதன் முக்கியத்துவத்தை சங்கீதத்தில் வாசிக்கலாம்

**சங்கீதம் 23:4**

“தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்.உமது கோலும் உமது தடியும் என்னைத்தேற்றும்”

இங்கு உமது கோலும் உமது தடியும் என்பது ஆவிக்குரிய இஸ்ரயேலரை தேற்றுகிறதாக காண்கிறோம். இது தேற்றரவாளனாகிய சத்திய ஆவியை அடையாளப்படுத்துகிறது.

**யோவான் 16:13**

“சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்”

சத்திய ஆவி என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கும். இங்கு **‘உமதுகோல்”** - தேவனுடைய வார்த்தை. **‘உமது தடி”** - தேவனுடைய பரிசுத்தஆவி.

இறுதியாக நாம் வாசிக்கையில் -

**"அதை தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள், அது கர்த்தருடைய பஸ்கா"** - இது பஸ்கா அனுசரிப்பைப் பற்றிய கடைசி வார்த்தைகளாகும். அந்த அனுசரிப்பில் ஒருவர் பெற்றிருக்கவேண்டிய சிந்தையைக் குறிக்கிறது. இது நிஜத்தில் ‘பெரிதான இரட்சிப்பை” சுதந்தரிக்கப்போகிற ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பெற்றிருக்கவேண்டிய சிந்தையை அடையாளப்படுத்துகிறது. அதை அப்போஸ்தலனாகிய பவுல் பின்வரும் வசனத்தில் விவரிக்கிறதைக் காண்போம் -

**பிலிப்பியர் 2:12**

“ஆதலால் எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்”

இதுவே அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் இருக்கவேண்டிய சிந்தையாகும். இது நேரடியான நடுக்கத்தை குறிப்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. மாறாக மிக ஜாக்கிரதையாக இருப்பதைக் குறிக்கிறது -

**எபிரேயர் 4:1**

“ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்டஅழைப்புக்குப்பாத்திரவான்களாய்நடந்து”

இங்கு ஒவ்வொரு நாளும்.. ஒவ்வொரு மணி நேரமும்.. ஒவ்வொரு கனப்பொழுதும்.. இந்த பரலோக அழைப்பில், அதுவும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவருடைய ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்வில் விசேஷமானவை என்று படிப்படியாக உணர்வதைக் குறிக்கிறது. இதுவே **"தீவிரமாக புசித்தல்"** .

ஆம். நிழலில் யூதர்கள் அனுசரிக்கும்படி இந்த ‘நியமனத்தை” பெற்றுக்கொண்டார்கள்.. ஆனால் அதைவிட முக்கியமானதொன்றை இன்றைய கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை பின்வரும் வசனம் விளக்குகிறது -

**1கொரிந்தியர் 5:8**

"ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்"

ஆம். கிறிஸ்தவர்களாகிய நாம் அந்த நிழல் குறிக்கிற நிஜத்தை அனுசரிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். இதை பின்வரும் வசனத்தை வாசித்து புரிந்துகொள்வோம் -

**லூக்கா 22:14-19**

"வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி - நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி - நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள். தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப் பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று இவர்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து- இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்"




இங்கு கர்த்தர் தம்முடைய மரணத்திற்கு முந்தைய இரவில் பஸ்காவை அனுசரித்ததாக நாம் காண்கிறோம். எனவே தான் இதை "**கடைசி இராப்போஜனம்**" என்று அழைக்கிறோம். அவர் நிழலை நிறைவேற்றுகிற நிஜமான தேவ ஆட்டுக்குட்டியாக மாறினார். அந்த கடைசி பஸ்காவில் அவர் புதிய அடையாளங்களாக 'அப்பம்" மற்றும் "**திராட்சரசத்தை**" நியமித்தார். இது அவருடைய சொந்த மாம்சத்தையும் இரத்தத்தையும் குறிக்கிறது. மேலும் ஒட்டுமொத்தமாக அவர் உலக மனுக்குலத்திற்கு( மாற்கு 10:45) ஈடுபலியாக தந்த அவருடைய தியாக மரணத்தைக் குறிக்கிறது. இதுவே அந்த அப்பம் மற்றும் திராட்சை ரசம் என்ற அடையாளங்களின்அடிப்படைப் பொருளாகும்.

மேலும் **இங்கு கர்த்தர் தம்முடைய சீஷர்களை "அப்பம்" புசிக்கவும், ...."பாத்திரத்தில்" பானம் பண்ணவும் அழைப்பதை இங்கு நாம் காண்கிறோம்** . இதை பவுல்அப்போஸ்தலனும் குறிப்பிடுவதைக் காண்கிறோம் -

**1கொரிந்தியர் 10:16**

"நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?"

இது எதைக் குறிக்கிறது? இது தம்முடைய பாடுகளில் பங்கேற்று அவரை... மரணபரியந்தம் பின்பற்ற "சபை வகுப்பாருக்கு" கொடுக்கப்பட்ட அழைப்பை குறிக்கிறது. கர்த்தருடைய பாடுகளில்

பங்கேற்கும் இந்த உரிமை பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது -

**கொலோசெயர் 1:24**

"இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து,
கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை
அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்"

இங்கு கிறிஸ்துவின் உபத்திரவங்களில் பங்குபெறும் இந்த உரிமையைக் குறித்து பவுல் விளக்குகிறார். மேலும் அதை அவர் **"கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக" பெற்றுக்கொள்ளுகிற ஞானஸ்நானம**' என்றும் விவரிக்கிறார்

**ரோமர் 6:3**

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய
மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? "

இங்கு நாம் அவருடைய மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தைக் குறித்த ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கவேண்டும்.

இயேசுவின் மரணம் என்பது அவருடைய சொந்த பாவத்தினால் சம்பவிக்கவில்லை. மாறாக அது உலகத்தின் பாவங்களுக்காக சம்பவித்தது. ஆம். அவருடைய மரணம் ஒரு தியாக மரணம்(**தானியேல் 9:26**). இவ்விதமாக கிறிஸ்தவர்களும் தங்களுடைய மாம்சீக ஜீவியத்தை தியாக மரணத்தில் பலியிட அழைக்கப்படுகிறார்கள். மாறாக தங்களுடைய பாவங்களுக்காக அல்ல. இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**ரோமர் 12:1**

"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும்
தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று ,
தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்.
இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"

இங்கு சொல்லப்பட்டுள்ள **'பரிசுத்தம்"** என்பது, நீதியின் சால்வை மூலம் பெறப்படுகிற **நீதிமானாக்கப்படுதல்**' (ஏசாயா 61:10)

"நம்முடைய பாவங்களை" அடிக்கடி அறிக்கையிடுவதன்மூலம் அந்த நீதிமானாக்கப்பட்ட நிலை பாதுகாக்கப்படுகிறது( **1யோவான் 1:9** ). இதுவே அவருடைய தியாக மரணத்திற்குள்ளாகும் மாபெரும் உரிமையைக் குறிக்கிறது.

இதுவும்... **"கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஐக்கியம்"** என்று **1கொரிந்தியர் 10:16** குறிப்பிடுகிறது. இது உலகத்திற்கும் பெயர்கிறிஸ்தவர்களுக்கும் இரகசியமானதாக இருக்கிறது.

எனவே **1கொரிந்தியர் 10:17** இல் நாம் வாசிக்கையில், இது'அநேக" அங்கத்தினரைக் கொண்டிருந்தாலும ' **"கிறிஸ்துவின் சரீரத்தில்" இருக்கும் ஒருமை** யைக் குறிக்கிறது -

**எபேசியர் 4:4**

"உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு
அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.."

இதுவெ கிறிஸ்துவோடு இருக்கிற "ஐக்கியமும்", அந்த 'ஒரே ஞானஸ்நானத்தில்"பங்குபெறுவதும் என்று காண்கிறோம் -

**எபேசியர் 4:5**

"ஒரே கர்த்தரும் , ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்"

இந்த ஞானஸ்நானம் என்பது அடையாளத்தில் காணப்படுவதுபோல தண்ணீர் முழுக்கை மாத்திரம் குறிப்பதல்ல. மாறாக அதைக் காட்டிலும் ஆழமான பொருளை கொண்டிருப்பதை கர்த்தர் விளக்குவதைக் காண்கிறோம் -

**மாற்கு 10:38,39**

"இயேசு அவர்களை நோக்கி - நீங்கள் கேட்டுக்கொள்கிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார்"

கர்த்தரைப் பின்பற்றுகிற யாவருக்கும் கர்த்தருடைய "மரணமாகிய"... அந்த "ஒரே ஞானஸ்நானத்தின்" ஒருமைக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவரைப்போலவே பலியின் மரணத்திற்குள்ளாகும் சிலாக்கியமே அதுவாகும்.

எனவே ஒவ்வொரு முறையும் நினைவுகூறுதலை அனுசரிக்கையில் இந்த அடையாளங்களான "ஒரே அப்பம்" மற்றும் "ஒரே பாத்திரம்" பயன்படுத்தப்படுகின்றன.

இப்படியிருக்க,இந்த நினைவுகூறுதலில் பங்குபெறுபவர்கள் நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகள் என்ன? இதற்கான பதிலை வாசிப்போம் -

**1கொரிந்தியர் 11:28,29**

"எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்"

இந்த பரிசுத்த அடையாளத்தில் பங்குபெறும் ஒவ்வொரு முறையும், ஒருவர் தன் மனநிலையையும் நோக்கத்தையும் சுயபரிசோதனை செய்வதைக் குறித்துப் பேசுகிறது. கிறிஸ்துவின் பலியின் மரணத்திலும், அவருடைய பாடுகளிலும் பங்குபெறுவதாக அவர்கள் செய்த உடன்படிக்கையை நினைவில்வைத்து, அதை எந்தளவு நிறைவேற்றுகிறார்கள் என்று பரிசோதனை செய்வதைக் குறித்துப் பேசுகிறது.

"உடன்படிக்கை செய்த" அல்லது முழுமையாக ஒப்புக்கொடுத்த சரீர அங்கத்தினர் மாத்திரமே பங்குபெறவேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்

இதை அவரவர் பரிசோதனை செய்து கொள்ளவேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது "நினைவுகூருதலை" அனுசரிக்கும் ஒழுங்குமுறையைக் குறித்து காண்போம் -



**1கொரிந்தியர் 11:26**

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து,

இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம்
கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்"

இங்கு "..**பானம்பண்ணும்போதெல்லாம்**" என்ற வார்த்தை பலதரப்பட்ட சபைகள் பின்வருமாறு புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது -

ரோமன் கத்தோலிக்கா - இதை அனுதினமும் அல்லது ஒரு நாளில் பலமுறை என்றும்

புராட்டஸ்டன்ட் சபைகள் - இதை மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் என்று புரிந்து கொள்கின்றனர். சில சமயங்களில் இரண்டு அடையாளங்களும் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக ரோமன் கத்தோலிக்கர் மத்தியில் அப்பம் மாத்திரம் அதுவும் சின்ன சின்ன அப்பம்(ஓஸ்தி) பயன்படுத்தப்படுகிறது.

மேலும் இந்த பரிசுத்த அனுசரிப்பு ஒரு 'இராப்போஜனமாக" அதாவது சூரியன் அஸ்தமனமான பின்பு ஆறுமணிக்குமேல் இரவில் அனுசரிக்கப்படவேண்டும்.

- ஆனால் கத்தோலிக்க சபையினர் மத்தியில் .. இது ஒரு நாளில் காலை மற்றும் மாலை நேரங்களில் அநேக முறை அனுசரிக்கப்படுவதை பொதுவாகக் காணலாம்.

- புராட்டஸ்டன்ட் சபைகளிலோ சில இடங்களில் காலையிலும், சில இடங்களில் மத்தியமும், சில இடங்களில் மாலை நேரத்திலும் அனுசரிக்கப்படுகிறது.

- ஆனால் "கர்த்தருடைய இராப்போஜனம்" என்ற வார்த்தை தெளிவாக இருப்பதைக் காண்கிறோம். உண்மையில் "மகா பரிசுத்தமான விசுவாசம்"(**யூதா 20**) என்ற சத்தியம் பெயர் கிறிஸ்தவ மண்டலத்தின் சபைகளில் கெடுக்கப்பட்டு காணாமல்போயிருப்பதை காண்கிறோம்.

இப்படியிருக்க, இங்கு "பானம்பண்ணும்போதெல்லாம்" என்ற வார்த்தை உண்மையில் எதைக் குறிக்கிறது?

இந்த "நினைவுகூருதல்" யூதர்களுடைய பஸ்காவின் நிஜமாக இருப்பதையும், அது வருடாவருடம் யூதர்கள் அனுசரித்ததை நாம் உணரும்பொழுது இந்த பரிசுத்த அனுசரிப்பு - வருடத்திற்கு ஒருமுறை அனுசரிக்கப்படவேண்டும் என்பதைக் காண்கிறோம். இதை இரண்டு காரியங்கள் மூலம் நிரூபிக்கலாம் -

**1கொரிந்தியர் 11:25,26 மற்றும் எபிரேயர் 9:25** ஆகிய வசனங்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, "பானம்பண்ணும்போதெல்லாம்" என்ற வார்த்தை 'வருடந்தோறும்" என்று பொருள்தருவதை வாசிக்கிறோம் -

எபிரேயர் 9:25

"பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும்
பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல,
அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப்
பிரவேசிக்கவில்லை"



இங்கு பிரதான ஆசாரியன் வருடந்தோறும் அநேகந்தரம் அனுசரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதை **லூக்கா 22:19** ன் மூலம் நாம் நிரூபிக்கலாம் 'பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து"

இது இந்த ஒரு ஞாபகார்த்த நாளில் நம் ஆண்டவரின் மரணத்தை நினைவுகூர்கிறோம். பொதுவாக ஒருவருடைய மரணத்தை ஒவ்வொரு வருடமும், அந்த நாளில் மட்டுமே நாம் நினைவுகூறமுடியும்.

ஆம். நினைவுகூருதல் என்பது கர்த்தருடைய மரணத்தை ஞாபகப்படுத்த அனுசரிக்கப்படுவதாகும்.

எனவே அது வருடத்திற்கு ஒருமுறை - அதுவும் அவர் மரித்த நாளில் அனுசரிப்பதே மிகச் சரியானதாகும்.இதை கர்த்தரும் அவர் முதன்முதலில் நினைவுகூருதலை அனுசரித்தபோது கடைப்பிடித்தார்.

நாம் நம்முடைய உறவினர்களின் மரணநாளை ஒரு வருடத்தில் எத்தனைமுறை நினைவுகூர்கிறோம் என்று சிந்திப்பது அவசியமாகிறது. அதை நாம் மாதந்தோறும்... அல்லது வாரந்தோறும்.. அல்லது தினந்தோறும் அனுசரிக்கிறோமா? நிச்சயமாக அப்படி அனுசரிப்பதில்லை என்று நாம் அறிவோம்.

ஒரு வேளை இந்தியாவில் மகாத்மா காந்தியின் மரணநாளை மாதம் ஒருமுறை அனுசரித்தால் எப்படியிருக்கும்? அது கேலிக்குரியதாக இருக்குமே.

எனவே நினைவுகூருதலை சரியாக அனுசரிப்பது என்பது , கிபி 33ம் வருடம் எந்த நாளில் கர்த்தர் மரித்தாரோ, அதே நாளில் வருடாவருடம் அனுசரிக்கப்படவேண்டும். அந்த நாளை பஸ்காவின் நிழலில் பார்க்கையில் அது ஆபீப(நீசான்) மாதம் "14ம் நாள்" என்று காண்கிறோம்(யாத்திராகமம் 12:6).

மேலும் நிழலில் பஸ்காவின் ஆட்டுக்குட்டி சாயங்காலவேளையில் அடிக்கப்பட்டதாக வாசிக்கிறோம். இது நிஜத்தில் இயேசு 'தேவ ஆட்டுக்குட்டியாக" சாயங்காலம் மூன்றுமணிஅளவு அதாவது ஒன்பதாம் மணிவேளையில் மரித்து நிறைவேற்றினார்.

ஆனால் இயேசு இந்த "நினைவுகூருதலை" முந்தைய இரவில் அல்லது ஆபிப் மாதம்(நீசான்)13ம் நாள் சாயங்காலம் 6மணிக்கு துவங்கிய ஆபிப் மாதம்(நீசான்) 14ம் நாளின் துவக்கத்திற்கு பின்பு நியமித்தார்.

இவ்விதமாக வருடந்தோறும் நினைவுகூருதலின் நாளை கண்டுபிடிக்க நாம் யூத காலண்டரில் ஆபிப்(நீசான்) மாதம் 13ம் நாளை கவனிக்கவேண்டும்-

அன்று சாயங்காலம் 6மணிக்கு பின்பு எனும்போது ஆபிப்(நீசான்) மாதம் பதினான்காம் நாளின் துவக்கத்திற்கு கொண்டுவருகிறது. அது கர்த்தர் முதன்முதலாக "நினைவுகூருதலின்"ஆசரிப்பு முறையை நியமித்த நேரமாக இருக்கும். இதுவே வருடந்தோறும் நாம் அனுசரிக்கவேண்டிய கர்த்தருடைய நினைவுகூருதலின் நாளாக இருக்கும்.

வரக்கூடிய வருடங்களில்"நினைவுகூருதலின் நாள்" அல்லது
ஆபிப்(நீசான்) மாதம் 13ம்தேதி என்பது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது -

| | | | |
|---|---|---|---|
| 2011 | ஏப்ரல் | 17ம்தேதி | - ஞாயிறு |
| 2012 | ஏப்ரல் | 5ம்தேதி | - வியாழன் |
| 2013 | மார்ச் | 24ம்தேதி | - ஞாயிறு |
| 2014 | ஏப்ரல் | 13ம்தேதி | - ஞாயிறு |
| 2015 | ஏப்ரல் | 2ம்தேதி | - வியாழன் |

ஆதிகால சபையில், கர்த்தர் கொடுத்த அடையாளங்களோடு ஒரு முழுமையான இரவு உணவை புசிப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் அதை தவறாக பயன்படுத்தியதால் அவ்வழக்கத்தை கைவிட காரணமாயிற்று -

1கொரிந்தியர் 11:20-22

"நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்தி சாப்பிடுகிறான். ஒருவன் பசியாயிருக்கிறான். ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே.
புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டைபண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன்"

இறுதியாக, இந்த "நினைவுகூருதலில்" பங்கேற்கும் அனைவருக்கும் இருக்கும் கடினமான எச்சரிப்பு குறித்து வாசிக்கையில் -

1கொரிந்தியர் 10:21,22

"நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே... நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா?.."

இது எதைக் குறிக்கிறது? பரிசுத்த ஆவியும், உலகத்தின் ஆவியும் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒருவருக்குள் கலந்திருப்பதை குறிக்கிறது. இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகையில் -

யாக்கோபு 3:10,11

".. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?"

பரிசுத்தஆவியைப் பெற்றிருக்கிற ஒவ்வொருவரும் இந்த "உலகத்தின் ஆவி"யையும் அதன் கிரியைகளை எதிர்க்கவும், மேற்கொள்ளவும் எல்லா பிரயாசங்களையும் மேற்கொள்ள வேண்டும். உலக ஆவியின் இந்த "கிரியைகளை" குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

கலாத்தியர் 5:19-21

"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன - விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிறேன்"

நினைவுகூறுதலில் பங்குபெறுகிற ஒவ்வொருவரும் இவைகளைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இங்கு ஆதிகாலசபையில் **"அப்பம் பிட்கும்"** வழக்கத்தைப் பற்றி ஒரு விஷயத்தை நாம் தெளிவுபடுத்துவது அவசியம்-

அப்போஸ்தலர் 2:46 / 20:7

"அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி.."

"வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்"



- இங்கு "அப்பம் பிட்குதல்" எதைக் குறிக்கிறது?
- அவர்கள் அனுசரித்தது பஸ்கா என்று கூறமுடியுமா?
- அது கர்த்தருடைய நினைவுகூறுதலா?

நாம் 'கர்த்தருடைய இராப்போஜனம்" தினந்தோறும், வாரந்தோறும் பெயர் கிறிஸ்தவ சபைகளில் கடைப்பிடிக்கப்படுவதற்கு இவ்வசனம் ஆதாரமாக காண்பிக்கப்படுகிறது.

இதற்கான விடை என்ன?

லூக்கா 24:30

"அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்"

இங்கு யேசு மரித்தோரிலிருந்து தம்முடைய உயிர்த்தெழுதலுக்கு பின்பும், பெந்தெகொஸ்தே நாளுக்கும் இடையில் "அப்பம் பிட்குவதை" காண்கிறோம்.

இதை வாசிக்கிற ஒருவர், இது பஸ்காவைக் குறிக்காது என்று உணர்வார். அது ஒரு இரவு உணவு என்றும் சரியாக நிதானிப்பார்.

இப்படியிருக்க, இந்த "அப்பம் பிட்குதல்" கடைப்பிடிக்கப்பட்டதன் காரணம் என்ன? இது யூத வழக்கத்தின்படி ஆகாரம் உண்ணுவதற்கு முன் தேவனுக்கு ஏறெடுக்கப்படுகிற 'நன்றி தெரிவித்தலாகும்".

அவ்வேளையில், அவர்களில் ஒருவர் , ஒரு அப்பத்தை எடுத்து தேவனுக்கு நன்றி தெரிவித்தபின்பு அதை அங்கு இருப்பவர்களின் எண்ணிக்கைக்கு அளவாக பிட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு துணிக்கை கொடுத்து பின்பு அனைவரும் உணவு உட்கொள்ளத் துவங்குவர். இதை இயேசுவும் செய்ததை மேற்கண்ட வசனம் கூறுகிறது.

இந்த யூதர்களுடைய வழக்கம் ஆதிகால சபையில் கடைபிடிக்கப்பட்டது. ஆம். அது சகோதர ஐக்கியத்திற்கும் அன்பிற்கும் அடையாளமாக இருந்தது.

ஆனால் இவ்விதமாக **"அப்பம் பிட்குதலுக்கும்"** நாம் கடைபிடிக்கும்படி பெற்றுக்கொண்ட **"கர்த்தருடைய இராப்போஜனத்திற்கும்"** எவ்வித சம்பந்தமும் இல்லை.

இறுதியாக, இதன் பின்னணியில் எழும் கேள்வி குறித்து பார்ப்போம் -

1கொரிந்தியர் 11:20 -26

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில்

பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும்
அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்"

இன்று கர்த்தர் 2ம் வருகையில் 1874ம் வருடம் வந்தபின்பும், கிறிஸ்துவின் சரீரமானது இன்றும் பஸ்காவை அனுசரிப்பதன் காரணம் என்ன? பஸ்காவை கடைப்பிடிப்பதை நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் வருகிறது.
இக்கேள்விக்கான விடையை நம் கர்த்தருடைய வார்த்தைகளில் காண்கிறோம் -

**லூக்கா 22:16**

"தேவனுடைய இராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும் நான் இனி
இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி.."

இதன்மூலம் பஸ்கா அனுசரிப்பது நிறுத்தப்படுவது என்பது தேவனுடைய இராஜ்யத்திற்குள் நிறைவேறுவதாக இருக்கிறது. மாறாக... அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்போ அல்லது இராஜ்யம் வருவதற்கு முன்போ அல்ல. மேலும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு பாகமாகிய,
".. பின்பு உயிரோடிருக்கும் நாமும்.." (1தெசலோனிக்கேயர்4:17) என்று குறிப்பிடப்படுகிறவர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு பின்பும்.. 1874ம் வருடம் இராஜ்யத்தின் கண்ணுக்குத்தெரியாத பாகம் துவங்கினபின்பும் மாம்சத்தில் உயிரோடிருப்பார்கள் என்று நாம் அறிவோம். அவர்கள் அனைவரும் மகிமையடையாமல் **"மாம்சத்தில்" இருக்கும்வரை "பஸ்காவை"** தொடர்ந்து அனுசரிப்பார்கள்.

இப்படியிருக்க **1கொரிந்தியர் 11:26** ல் அப்போஸ்தலனாகிய பவுல் கூறியுள்ள வார்த்தைகளின் முக்கியத்துவம் என்ன?

"கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்"

இங்கு கர்த்தர் வருமளவும்" என்பது பொதுவாக இரண்டாம் வருகையின் வருடத்தைக் குறிப்பதாக புரிந்துகொள்ளப்படுகிறது. ஆனால் நாம் பவுலின் வார்த்தைகளை வாசிக்கும்பொழுது, அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்வதைப்போல எச்சரிக்கையாக இருக்கவேண்டும்

**2பேதுரு 3:16**

"எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான்.
அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது.
கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப்
புரட்டுகிறதுபோலத் தங்களுக்கு கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்"

இங்கு அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை.. நமது கர்த்தருடைய வார்த்தையோடு இணைத்துப் பார்க்கும்பொழுது -
"..தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும்.."
"..கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்"
நாம் பெறுகின்ற சிந்தனை என்னவெனில்,

**"தேவனுடைய இராஜ்யத்தில் .. அவர் வருமளவும்"**

ஆம். இது "கர்த்தர் கண்ணுக்குத்தெரிகிற பாகத்தில் வரும் காலத்தைக்" குறிக்கிறது. இதை

பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**மத்தேயு 25:31**

“ அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்”

இது மகிமையடைந்த முழு சபையோடு இஸ்ரயேலில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் காலத்தைக் குறிக்கிறது.

அப்பொழுது “பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது..”

ஆம்.இங்கு தெளிவாக இருப்பதைக் காண்கிறோம்.

எனவே நிஜமான பஸ்கா என்பது..

சபை மாம்சத்தில் இருக்கும்வரை அனுசரிக்கப்படுவது தொடரும். மேலும் கண்ணுக்குத் தெரிகிற பாகம் இஸ்ரயேலில் ஸ்தாபிக்கப்படுவதற்கு சற்று முன்புவரை அனுசரிக்கப்படும்.

அது வரை “ நாம் பஸ்காவை ஆசரிப்போம்” ஆமென்

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/